# இயல் 7.1 எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.4.5.B

எண்ணியல் - தசம எண்களை ஒப்பிடுக - தநாஅபு பயிற்சி 1.5 - 3-4

Number System - Decimal Numbers - Comparison

## எண்ணியல் - தசம எண்களை ஒப்பிடுக - தநாஅபு பயிற்சி 1.5 - 3-4

3. பின்வரும் தசம எண் சோடிகளில் எது பெரியது?.

i) 0.888, 0.28

0 . 8 8 8 > 0 . 2 8

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியும் சமமானவையே.
- எனவே, அதற்கடுத்துள்ள இலக்கமான பத்தில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, $8 > 2$. எனவே, 0.888 என்பது பெரிய எண்ணாகும்.

ii) 23.915, 23.914

2 3 . 9 1 5 > 2 3 . 9 1 4

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, கொடுக்கப்பட்டுள்ள இரு எண்களின் முழு எண் பகுதியும் சமமானவையே.
- அதேபோல், பத்தில் ஒன்றாம் இலக்கம் மற்றும் நூறில் ஒன்றாம் இலக்கம் ஆகியவையும் சமமாகவே உள்ளன.
- ஆனால், ஆயிரத்தில் ஒன்றாம் இலக்கத்தை ஒப்பிடுகையில் $5 > 4$ எனத் தெரிகிறது.
- எனவே, 23.915 என்பது பெரிய எண்ணாகும்.

4. 25 மீ நீச்சல் போட்டியில் 5 நீச்சல் வீரர்கள் $A$, $B$, $C$, $D$, $E$ ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்களின் நேரங்கள் முறையே 15.7 வினாடிகள், 15.68 வினாடிகள், 15.6 வினாடிகள், 15.74 வினாடிகள், 15.67 வினாடிகள் எனில், போட்டியின் வெற்றியாளரைக் கண்டறிக.

5 நீச்சல் வீரர்களில் யார் குறைவான நேரத்தில் 25மீ, தூரத்தை கடந்தார் என்பதைக் கண்டறிந்தால், வெற்றியாளரைக் கண்டுபிடிக்க இயலும்

- $A$ → 1 5 . 7
- $B$ → 1 5 . 6 8
- $C$ → 1 5 . 6
- $D$ → 1 5 . 7 4
- $E$ → 1 5 . 6 7

- முதலில் கொடுக்கப்பட்டுள்ள எல்லா எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, எல்லா எண்களின் முழு எண் பகுதியும் சமமானவையே.
- எனவே, அடுத்த இலக்கமான பத்தில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, $6 < 7$. மேலும், 15.68, 15.6 மற்றும் 15.67 ஆகிய மூன்று எண்களும் சமமான பத்தில் ஒன்றுகள் இலக்கத்தைப் பெற்றுள்ளன.
- எனவே, அடுத்த இலக்கமான நூறில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, $0 < 7 < 8$. (15.6 - ல் நூறில் ஒன்றாம் இலக்கத்தின் மதிப்பு 0 ஆகும்.)
- எனவே, 15.6 என்பது சிறிய எண்ணாகும்.

$\therefore$ 25 மீ நீச்சல் போட்டியின் வெற்றியாளர் $C$ ஆவார்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 31st August, 2022 :: 10:50 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**